


07.04.2024

தலைப்புச் செய்திகள்

1. நாடுமுழுவதும் மக்களவை தேர்தலுக்கான் பிரச்சாரமும், தேர்தல் ஆணையத்தின் விழிப்புணர்வு நடவடிக்கைகளும் முழுவீச்சில் நடைபெறுகின்றன.

2. வாகன சோதனையின் போது பறிமுதல் செய்யப்படும் 10 லட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட தொகை குறித்து வருமானவரித்துறை விசாரிக்கும் என்று மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு.சத்யபிரதசாகு கூறியுள்ளார்.

3. உடல் நலத்தை வலியுறுத்தும் உலக சுகாதார தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

4. தமிழகத்தில் வெப்ப அலை வீசக்கூடிய சூழல் நிலவுவதால் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை பொதுமக்கள் பின்பற்ற அறிவுறுத்தப்படுகின்றனர்.

5. ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் மும்பையில் இன்று பிற்பகல் மும்பை இண்டியன்ஸ் - டெல்லி கேப்பிட்டல்ஸை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

பிரச்சாரம்

தமிழகம் உட்பட நாடுமுழுவதும் 102 மக்களவை தொகுதிகளுக்கு வரும் 19ஆம் தேதி முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ள நிலையில் அரசியல் கட்சித்தலைவர்கள் அனல் பறக்கும் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிஜேபி மூத்த தலைவரும் பிரதமருமான திரு.நரேந்திரமோதி இன்று பீகார் மாநிலம் நவாடாவில் வாக்கு சேகரிக்கையில் நாட்டு மக்கள் அனைவரும் ஏழ்மையிலிருந்து விடுவிக்க தாம் தொடர்ந்து அயராது பணியாற்றுவதாக தெரிவித்தார்.

தமது கட்சி மற்றும் கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக மேற்கு வங்க மாநிலம் ஜல்பைகுரியிலும், மத்திய பிரதேச மாநிலம் ஜபல்பூரிலும், இன்றுமாலை பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

சிதம்பரம், தொகுதியில் பரப்புரையில் ஈடுபட்ட பிஜேபி தேசிய தலைவர் திரு.ஜே.பி.நட்டா தமிழகத்தின் நலனிற்கான பல்வேறு திட்டங்களை அக்கட்சி முன்னெடுத்துள்ளதாக கூறினார்.

திருச்சி கரூர், விருதுநகர், தொகுதிகளிலும் பிஜேபி கூட்டணி வேட்பாளர்களுக்கு ஆதரவாக அவர் இன்று பிரச்சாரத்தில் ஈடுபடுகிறார்.

காங்கிரஸ் கட்சியின் திரு.ராகுல் காந்தி தமது கட்சியின் தேர்தல் அறிக்கை பொதுமக்களை கலந்து ஆலோசித்து உருவாக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

இதனிடையே அக்கட்சி தலைவர் திரு.மல்லிகார்ஜுன கார்கே காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி இளைஞர்களின் வேலை வாய்ப்பை உறுதி செய்யும் என்று கூறினார்.

நாட்டில் வேலை வாய்ப்பு மற்றும் கற்றலுக்கு தடையாக உள்ள காரணிகளை நீக்கவும், தொழில் வளர்ச்சிக்கான புதிய வழிகளை கண்டறியவும் தமது கட்சி முயற்சிகளை மேற்கொள்ளும் என்றும் தெரிவித்துள்ளார்.

தமிழக அரசின் மகளிர் உரிமை தொகை மூலம் கிராமப்புற பொருளாதாரம் மேம்பட்டுள்ளதாக திமுக தலைவரும் முதலமைச்சருமான திரு.மு.க.ஸ்டாலின் புதுச்சேரியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் கூறினார்.

தபால் வாக்குப்பதிவிற்கான நடைமுறைகள் இன்று தொடங்கிய நிலையில் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் சிந்தித்து வாக்களிக்குமாறு அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி கேட்டுக்கொண்டுள்ளார்.

பிஜேபி மாநிலத்தலைவர் திரு.அண்ணாமலை கோவையிலும்,

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. செல்வபெருந்தகை ராதாபுரம் விளவங்கோடு நாகர்கோவில் பகுதிகளிலும் இன்று பிரச்சாரம் மேற்கொள்கின்றனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

சத்யபிரதசாகு

தேர்தல் நேரத்தில் வாகன சோதனையின் போது உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்டு பறிமுதல் செய்யப்படும் தொகை 10 லட்சம் ரூபாய்க்கு மேல் இருப்பின் அதுகுறித்து வருமானவரித்துறை விசாரிக்கும் என தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திரு.சத்யபிரதசாகு தெரிவித்துள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

பறக்கும் படை

சென்னை தாம்பரம் ரயில் நிலையத்தில் ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட 4 கோடி ரூபாய் ரொக்கப்பணத்தை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

இதுதொடர்பாக 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர் பேட்டையில் உரிய ஆவணங்கள் இன்றி காரில் கொண்டு செல்லப்பட்ட ஒரு லட்ச ரூபாய் ரொக்கப்பணத்தை தேர்தல் பறக்கும் படையினர் இன்று பறிமுதல் செய்தனர்.

தஞ்சையில் உரிய ஆவணங்கள் இன்றி கைப்பற்றப்படும் ரொக்கம் மற்றும் பரிசுபொருட்களை மாவட்ட மேல்முறையீட்டு குழுவில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து விடுவித்து கொள்ளும் வகையில் தினசரி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாவட்ட தேர்தல் அலுவலரும், ஆட்சித்தலைவருமான திரு.தீபக் ஜேக்கப் தெரிவித்துள்ளார்.

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் அருகே நடுகடலில் கடத்தப்பட்ட 4.9 கிலோ தங்கத்தை இந்திய கடலோர காவல்படை, சுங்க தடுப்பு பிரிவு காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

இலங்கையிலிருந்து இத்தங்கத்தை கடத்திய 3 பேர் கைதுசெய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

தேர்தல் ஆணையம்

மக்களவை தேர்தல் அறிவிக்கப்பட்ட 20 நாட்களில் சுவிதா இணையதளத்தில் 73 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

நாடுமுழுவதும் தேர்தல் பிரச்சாரம் முழுவீச்சில் நடைபெற்று வரும் நிலையில் வேட்பாளர்கள் வாக்காளர்களை சென்றடையும் வகையில் வாக்குகளை சேகரித்து வருகின்றனர்.

இதற்கான பேரணிகள், தற்காலிக கட்சி அலுவலகங்கள் திறப்பு, வீடுவீடாக சென்று பிரச்சாரம் செய்தல், வாகன அனுமதிகளை பெறுதல் உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கு இந்த இணையதளம் வாயிலாகவும் அரசியல் கட்சிகள் அனுமதி பெறலாம்.

இதுவரை 44 ஆயிரத்து 600க்கும் மேற்பட்ட கோரிக்கைகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன.

11 ஆயிரத்து 200 கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் தகுதியற்றவை எனவும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

மீதமுள்ள விண்ணப்பங்கள் செயல்பாட்டில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்திலிருந்து அதிகபட்சமாக 23 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணையம் குறிப்பிட்டுள்ளது.

சுவிதா இணையதளம் வாயிலாக அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் தடையின்றி 24 மணிநேரமும் நாட்டின் எந்த பகுதியிலிருந்தும் அனுமதி கோரிக்கைகளை ஆன்லைன் வாயிலாக சமர்ப்பிக்கலாம் என தெரிவித்த தேர்தல் ஆணையம் அனைவருக்கும் சம வாய்ப்பை உருவாக்கும் வகையில் நேரடியாகவும், தங்களது கட்சி பரப்புரைக்கான அனுமதிகளை பெறலாம் என்றும் கூறியுள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

தேர்தல் அலுவலர் பயிற்சி

தமிழ்நாடு முழுவதும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான 2-ம் கட்ட பயிற்சிகள் இன்று நடைபெறுகிறது.

வாக்குச்சாவடிகளில் 3 லட்சம் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஈடுபட உள்ள நிலையில் இன்றைய பயிற்சியின் போது அவர்களுக்கான தபால் வாக்குச்சீட்டுகள் வழங்கப்படும்.

வரும் 16 ஆம் தேதி நடைபெற உள்ள 3-ம் கட்ட பயிற்சியின் போது இவர்கள் அனைவரும் தத்தம் வாக்குகளை பதிவுசெய்யும் வகையில் பயிற்சி நடைபெறும் இடங்களிலேயே வாக்குப்பெட்டிகள் வைக்கப்பட உள்ளன.

ஈரோடு மாவட்டத்தில் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு நடைபெறும் இடங்களிலேயே அலுவலர்கள் தங்கள் தபால் வாக்குகளை செலுத்துவதற்கு வகை செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.ராஜகோபால் சுன்காரா தெரிவித்துள்ளார்.

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

100 சதவிகிதம்

மக்களவை தேர்தல் வாக்குப்பதிவிற்கு 12 நாட்களே எஞ்சியுள்ள நிலையில் 100 சதவிகித வாக்குபதிவை உறுதி செய்யும் வகையில் தேர்தல் ஆணையம் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது.

நாமக்கல்லில் விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டம் இன்று நடைபெற்றது.

மாவட்ட நிர்வாகம் மற்றும் பல்வேறு அமைப்புகள் சார்பில் உறுதிமொழி ஏற்பு, சிலம்பம், பேரணி கையெழுத்து இயக்கம் உள்ளிட்ட பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் இன்று நடைபெற்றன.

சென்னை மெரினா கடற்கரையில் வடிவமைக்கப்பட்டுள்ள விழிப்புணர்வு மணற்சிற்பத்தை மாவட்ட தேர்தல் அலுவலர் டாக்டர் ஜே.ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் இன்று பார்வையிட்டனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

தேர்தல் இருவரி

சிவகங்கை மாவட்டத்தில் கடந்த 10 ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களில் 60 சதவிகிதத்திற்கும் குறைவான வாக்குகள் பதிவான வாக்குச்சாவடிகளை கண்டறிந்து அவற்றில் 100 சதவிகித வாக்குப்பதிவை உறுதி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

மேலும் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆயிரத்து 357 வாக்குச்சாவடிகளில் பயன்படுத்தப்பட உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் தொகுதி வாரியாக பிரித்து அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்பட்டு வரும் தொலைக்காட்சி மற்றும் ஊடக செய்தி கட்டுப்பாட்டு அறையை தேர்தல் சிறப்பு செலவின பார்வையாளர் திரு.பாலகிருஷ்ணன் இன்று ஆய்வு செய்தார்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் முதல்நிலை பரிசோதனை அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் இன்று நடைபெற்றது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

முதல்முறை வாக்காளர்கள்

மக்களவை தேர்தலில் 18 வயது பூர்த்தி அடைந்த முதல் முறை வாக்காளர்கள் தவறாது வாக்களிக்க வேண்டியதன் அவசியத்தை தேர்தல் ஆணையம் வலியுறுத்தி வருகிறது.

இந்நிலையில் நாகை மாவட்டத்தை சேர்ந்த முதல் முறை வாக்காளர் வாக்களிக்க ஆர்வமுடன் உள்ளதாக தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

உலக சுகாதார தினம்

உலக சுகாதார தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

உலக சுகாதார நிறுவனம் றுர்ழு நிறுவப்பட்ட நாளை குறிக்கும் வகையில் 1950ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் உலக சுகாதார தினம் கடைபிடிக்கப்படுகிறது.

சுகாதார பிரச்சனைகள் குறித்த விழிப்புணர்வு, நல்வாழ்வின் முக்கியத்துவம் உள்ளிட்டவை இந்நாளில் வலியுறுத்தப்படுகிறது.

“எனது உடல்நலம் எனது உரிமை” என்பதே இந்தாண்டின் கருப்பொருளாகும்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

ஆட்டுசந்தை

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் வாராந்திர ஆட்டுசந்தையில் ரமலான் பண்டிகையை ஒட்டி அதிக அளவிலான ஆடுகள் விற்பனையாகும் என வியாபாரிகள் எதிர்பார்த்த நிலையில், தேர்தல் விதிமுறைகள் காரணமாக வெளிமாநில மற்றும் மாவட்டங்களை சேர்ந்த நுகர்வோரின் எண்ணிக்கை குறைந்த அளவிலேயே காணப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

வானிலை

தமிழகத்தில் இன்று ஓரிரு இடங்களில் வெப்ப அலை வீசக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கரூர் தர்மபுரி உள்ளிட்ட உள் மாவட்டங்களில் 3 முதல் 5 டிகிரி செல்சியஸ் வரை இயல்பை விட கூடுதலாக வெப்பநிலை காணப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்ற பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

இந்நிலையில் நாளை முதல் வரும் 13ஆம் தேதிவரை ஓரிரு இடங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அம்மையம் கூறியுள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

கோவில்

திருச்சி சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோவில் சித்திரை பெருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் வரும் 16-ம் தேதியும்,

தெப்போற்சவம் 19-ம் தேதியும் நடைபெறுகிறது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

கிரிக்கெட்

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் மும்பையில் இன்று பிற்பகல் மூன்றரை மணிக்கு மும்பை இண்டியன்ஸ் - டெல்லி கேப்பிட்டல்ஸை எதிர்கொள்கிறது.

லக்னோவில் இரவு ஏழரை மணிக்கு லக்னோ சூப்பர் ஜெயன்ஸ் - குஜராத் டைட்டன்ஸுடன் மோதுகிறது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

ஹாக்கி

பெர்த்தில் நடைபெறும் இந்திய - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான 5 போட்டிகள் கொண்ட ஹாக்கி தொடரின் 2ஆவது ஆட்டம் இன்று நடைபெறுகிறது.

நேற்று நடைபெற்ற முதல் ஆட்டத்தில் ஆஸ்திரேலியா - இந்தியாவை 5-1 என்ற கோல் கணக்கில் வென்றது.

3ஆவது ஆட்டம் வரும் புதன்கிழமை நடைபெற உள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

ழுழுழுழுழுழுழுழுழுழுழுழு